DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No.283/2017

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி

| | |
|---|---|
| Name | ஜெயக்குமார் |
| Father's Name | த/பெ.குமாரபெருமாள் (எ) போஸ் |
| Village | |
| Taluk | |
| Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.06.2025

**முதல் விசாரணை :-**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். மனு சம்பந்தமாக எனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக நிரூபணவாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். தற்போது கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையொப்பங்கள் செய்துள்ளேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -**

1.இவ்வழக்கில் ஏற்கனவே நான் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே மனு தாக்கல் செய்திருந்தபோது 2 வது எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் நிறுவனத்தை தவறுதலாக சேர்த்துவிட்டோம் என்றால் நாங்கள் தவறாக சேர்க்கவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும், 10 ம் வகுப்பு வரை

படித்துள்ளேன். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் என்ன என்றால் TN 72 D 6591 ஆகும். மேற்படி விபத்தில் ஈடுபட்ட வாகனத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் பெயரில் காப்பீடு இருப்பதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் 4வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்திருந்ததாக குறிப்பிட்டு எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1, 3, 4 எதிர்மனுதாரர்கள் மீதுதான் நான் இழப்பீடு போடமுடியும் என்றும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் எனது கட்சியை பொறுத்து முன்னுக்குபின் முரணாகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.)**

ஒம்/-P.V.வஷீத்குமார்,
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**